**செய்தி வெளியீடு** **நாள் : 13.07.2024**

**திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் ரூ.427 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம் 80% பணிகள் முடிவடைந்த நிலையில், வருகின்ற மார்ச் மாதம் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (13.7.2024) திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் **சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் ரூ.427 கோடி** மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தின் பணிகளை மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர்** (ம) **தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

பல்வேறு ஆட்சி காலங்களில் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக சென்னையை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளில் இது போன்ற பேருந்து நிலையங்கள் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் காலத்தில்** திட்டமிடப்பட்ட கோயம்பேடு பேருந்து நிலையமாக இருந்தாலும் சரி, அண்மையிலே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** திறந்து வைக்கப்பட்ட கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் என்றாலும் சரி, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அறிவிக்கப்பட்ட மாமல்லபுரம் பேருந்து நிலையம், செங்கல்பட்டு பேருந்து நிலையம், முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் என்றாலும் சரி, கடந்த ஆட்சி காலத்தில் திட்டமிடப்பட்ட குத்தம்பாக்கம் பேருந்து நிலையத்தில் துவங்கப்பட்ட பணிகள் பல்வேறு நிலையில் தேக்க நிலையில் இருந்தது என்பதை துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலர் திரு. அன்சுல் மிஸ்ரா அவர்களும், இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய அண்ணன் திரு.கிருஷ்ணசாமி அவர்களும், அதேபோல் இந்த மாவட்டத்தினுடைய அமைச்சராக இருந்த திரு.நாசர் அண்ணன் அவர்களும், இந்த குத்தம்பாக்கம் பேருந்து நிலையத்தை கடந்த ஆண்டுகளில் நேரடியாக ஆய்வுகளை மேற்கொண்டு ஏற்கனவே நடைபெற்று வரும் கட்டுமான பணிகளில் பொது மக்களுக்கு தேவையான கழிப்பிட வசதிகள், குளியல் அறைகள், பாலூட்டும் அறைகள், உணவகங்கள் பொதுமக்களுக்கு தேவைப்படுகின்ற மருத்துவமனைகள், அதேபோல் புறநகர் காவல் நிலையங்கள், தடையில்லா மின்சாரம், சீரான குடிநீர், கழிவுநீர் செல்வதற்கான அனைத்து வழித்தடங்களையும், மழைக்காலங்களில் பஸ் நிலையங்களில் தண்ணீரில் மூழ்காமல் இருக்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற பணிகளை இன்றைக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின்** உத்தரவின் பேரில் விரைவுப்படுத்துவதற்காக இன்று (13.07.2024) காலை ஆய்வினை மேற்கொண்டு, சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் ரூ.427 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்ற இந்த குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் என்பது திட்டமதிப்பீட்டிலேயே உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த பேருந்து நிலையம் அமையப்பெறுகின்ற நேரத்தில் சேலம், தர்மபுரி, ஓசூர் மற்றும் பெங்களூர் ஆகிய மாவட்டங்களுக்கு செல்கின்ற பயணிகள், அதேபோல் திருப்பதிக்கு செல்கின்ற பயணிகள் பெருவாரியாக இந்த பேருந்து நிலையத்தை பயன்படுத்துகின்ற நல்ல சூழ்நிலையை ஏற்படும். சென்னையினுடைய போக்குவரத்து நெரிசலுக்கு ஒரு தீர்வாக அமையும் என்பதால் இந்த பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்காக வெகு விரைவில் அர்ப்பணிக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள்** தொடர்ந்து பெரிய வளர்ச்சி திட்டங்களை ஆய்வு செய்கின்ற பொழுது குறிப்பாக இந்த பேருந்து நிலைய பணிகளை விரைந்து முடிக்க எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார். இந்த பேருந்து நிலையத்தை பொறுத்த அளவில் 41 கடைகள் அமைய இருக்கின்றன. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஆமினி பேருந்துகளுக்கு உண்டான டிக்கெட் கவுண்டர் போன்றவற்றைக்காக 8 கடைகள் அமைய இருக்கின்றன.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு உண்டான தனியான கழிப்பறைகள், மாற்றுத்திறனாளிகள் பயணிப்பதற்கு உண்டான சாய்வு தளங்கள், மாற்றுத்திறனாளிகள் ஓய்வு எடுப்பதற்கான ஓய்வு அறைகள், திருநங்கைகளுக்கு உண்டான தனியான கழிப்பறைகள், அதேபோல் உணவகங்கள், பாலூட்டும் அரை என அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பேருந்து நிலையத்தை பொறுத்த அளவில் முழுமையான மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும்பொழுது பேருந்து பயணத்தை மேற்கொள்பவர்கள் நிறுத்தி செல்வதற்கு உண்டான வாகனங்களான **2 சக்கர வாகனங்கள் சுமார் 1,811 வாகனங்களும், நான்கு சக்கர வாகனங்கள் 234 வாகனங்களும் நிறுத்தப்படுகின்ற அளவிற்கு பார்க்கிங் வசதி** செய்து தரப்பட்டிருக்கிறது. இந்த பேருந்து நிலைய பணிகளின் முன்னேற்றங்களை தொடர்ந்து ஆய்வு செய்து வெகு விரைவில் இந்த பேருந்து நிலையத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதுதான் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் திட்டமாக மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்ந்து இந்த பகுதியில் மாதம் ஒரு முறையாவது துறையினுடைய செயலாளர், உறுப்பினர் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் ஆகியோர் ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றனர்.

வளர்ந்து வரும் மக்கள் தொகை அடிப்படையில் மக்களுடைய பயணங்களுக்கு தேவையான சாத்தியக்கூறுகளை கண்டாராய்ந்து இது போன்ற புதிய பேருந்துகள் நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன அதேபோல் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** ஆட்சி ஏற்பட்ட பிறகு பேருந்து நிலையங்கள் மட்டுமன்றி புதிய பேருந்துகள் வாங்குகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **குறிப்பாக இந்த பேருந்து முனையமானது முழுமையாக குளிரூட்டப்பட்ட ஒரு பேருந்து முனையமாக அமைய இருக்கின்றது. இந்த பேருந்து முனையம் 80% பணிகள் முடிவடைந்த நிலையில், வருகின்ற மார்ச் மாதம் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.** இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.கிருஷ்ணசாமி, நகர் மன்ற துணைத்தலைவர் திரு.தேசிங்குராஜா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் (குத்தம்பாக்கம் பேருந்து முனையம்) திரு.ஜெ.பார்த்தீபன், (திருவள்ளூர்) திரு.ஆ.இராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.பா.ராஜ மகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி.பா.விஜயகுமாரி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.